www.kalvikural.com

# வேதியியல்

பின்தங்கிய மாணவர்களுக்கு பின்பற்றப்படும் வழ¨காட்டு முறைகள்

# கவனம் செலுத்த வேண்டிய பாடப்பகுதிகள்

www.kalvikural.com

| பாட எண் | அதிகபட்ச 5 மதிப்பெண் வினாக்கள் | வினாத்தாள் வடிவமைப்பில் உள்ள 5 மதிப்பெண் வினா | வினாத்தாள் வடிவமைப்பில் உள்ள 3 மதிப்பெண் வினா | வினாத்தாள் வடிவமைப்பில் உள்ள 1 மதிப்பெண் வினா | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|
| 5 | 4 | 1 | 0 | 2 | 7 |
| 7 | 5 | 1 | 1 | 1 | 9 |
| 8 | 6 | 1 | 1 | 1 | 9 |
| 9 | 3 | 1 | 1 | 2 | 10 |
| 10 | 5 | 1 | 1 | 2 | 10 |
| 11 | 0 | 0 | 2 | 1 | 7 |
| 17 | 5 | 1 | 0 | 2 | 7 |
| 22 | 4 | 1 | 1 | 0 | 8 |

- **மேற்குறிப்பிட்ட பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களையும் மாணவர்களின் திறனுக்கு ஏற்ப பயிற்சி கொடுத்தல் வேண்டும்.**

- 5 மதிப்பெண்களுக்குரிய விடைகளை பத்திகளாக எழுதாமல் சிறு சிறு விடைக் குறிப்புகளாக எழுத பயிற்சி அளிக்கலாம்.

அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும் வினாத்தாளில் பின்தங்கிய மாணவர்களை இக்குறிப்பிட்ட பாடப்பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களை மட்டும் ஒரு மதிப்பெண் வினாக்களுடன் விடையளிக்குமாறு அறிவுறுத்துதல்.

மேற்குறிப்பிட்ட பாடப்பகுதிகள் குறைவான பகுதிகளை கொண்டுள்ளதால் இப்பாடங்களில் கவனம் செலுத்தினாலே மாணவர்களால் 7 ஐந்து மதிப்பெண் வினாக்களுக்கும் 7 மூன்று மதிப்பெண் வினாக்களுக்கும் 9 ஒரு மதிப்பெண் வினாக்களுக்கும் விடையளிக்க முடியும்.

www.kalvikural.com

இக்குறிப்பிட்ட பாடப்பகுதிகளைப் படித்தால் 67 மதிப்பெண்களுக்கு மாணவர்களால் விடையளிக்க இயலும்

இதிலிருந்து குறைந்தபட்சம் 45 முதல் 50 மதிப்பெண்களை பெற்று பொதுத்தேர்வில் வெற்றி பெற்றிட இயலும்.

www.kalvikural.com

# பொதுவான வழிகாட்டுதல்கள்

- பாடப்புத்தகத்தில் அனைத்து பாடப் பகுதிகளிலும் வினா பகுதியில் தரப்பட்டுள்ள 1 மதிப்பெண் வினாக்களை மாணவர்களை படிக்கவைத்து சிறு தேர்வு நடத்துதல் வாய்மொழித்தேர்வு வைத்தல் மூலம் குறைந்த பட்சம் 15 முதல் 20 மதிப்பெண்கள் வரை பெற வைக்கலாம்

- தெரிவுசெய்யப்பட்ட பொதுத்தேர்வில் கேட்கப்பட்ட முக்கியமான 3 மதிப்பெண் வினாக்களை பயிற்சி செய்வதன் மூலம் குறைந்தது 5 முதல் 10 வினாக்களுக்கு விடையளிக்க வைத்தல் இயலும்.

  3 மதிப்பெண் வினாக்களில் குறைந்தது விளக்கம் மட்டும் எழுத அறிவுறுத்தலாம்

- மூன்று மதிப்பெண் வினாக்களின் சமன்பாடு தெரியவில்லையெனில்  விளக்கம் மட்டும் எழுத அறிவுறுத்தலாம்.

- மூன்று மற்றும் ஐந்து மதிப்பெண் வினாக்களில் வேறுபடுத்துதல் மாதிரியான கேள்விகளுக்கு பயிற்சி அளித்தால் தேர்வில் ஒரு மூன்று மற்றும் ஐந்து மதிப்பெண் வினாக்களுக்கு விடையளிக்க முடியும்.

- அனைத்து பாடப்பகுதிகளையும் சிறு சிறு அலகுகளாகப் பிரித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலரால் திட்டமிட்டு நடத்தப்படும் அலகுத் தேர்வுகளுக்கு பின்தங்கிய மாணவர்களை தவறாமல் தேர்வு எழுத செய்வதன் மூலம் மாணவர்களுக்கு தன்னால் தேர்வில் வெற்றி பெற முடியும் என்ற தன்னம்பிக்கையை ஊட்டி மாணவனுக்கு பொதுத் தேர்வு பற்றிய அச்சத்தை போக்கலாம்.

- மாவட்ட முதன்மை கல்வி அலுவலரால் திட்டமிட்டு நடத்தப்படும் அலகுத் தேர்வு வினாத்தாட்களில் கேட்கப்படும் வினாக்களுக்கு மீண்டும் மீண்டும் பயிற்சி அளிப்பதன் மூலம் பின்தங்கிய மாணவர்களை தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண்களை பெற்று எளிதில் வெற்றிபெற வைக்க இயலும்.